
புரட்சித்தலைவன்
பிரின்ஸ்!
லயன் காமிக்ஸ்
முழுநீள
சித்திரக்
கதை!

# ஹாட் - லைன்

வாசக நண்பர்களே,

வணக்கம். XIII (பதின்மூன்று) என்ற எண் ராசியில்லாதது என்பது பரவலானதொரு எண்ணம்! ஆனால் அந்த எண்ணையே பெயராகக் கொண்ட நமது இரத்தப் படல ஹீரோவுக்கு - எண்ணற்ற அபிமானிகள் நம் வாசக குடும்பத்தில் கிடைத்திட்டுள்ளதே! தினமும் வந்திடும் உங்கள் விமர்சனக் கடிதங்கள் - சென்ற மாத இதழான **இரத்தப் படலம் - பாகம் (7)** ஒரு super-duper ஹிட் என்பதை தெளிவாக்குகின்றன!

ஸ்பெஷலான பெரிய சைஸ்; அட்டைப்படத் தரம்; பிரமிக்க வைக்கும் சித்திரங்கள்; எல்லாவற்றிற்கும் மேலாக - சோகம் இழையோடும் அந்தக் கதையோட்டம் என்று அனைவரும் பெரிதும் பாராட்டியுள்ளனர்! அதே கையோடு - பாகம் - (8) எப்போது என்ற கேள்வியும் கூட! (பதில் : 1998 (ஜூலை) ஆண்டுமலரில்! இதே பெரிய சைஸ்; விலை ரூ. 10/-)

இம்மாதம் நீண்ட இடைவெளிக்குப் பின் கேப்டன் பிரின்ஸ் குழுவின் முழுநீள சாகஸக் கதை! இந்த இதழின் highlight - அற்புதமான சித்திரங்களே! (இரத்தப் படலம் போலவே - இதையும் கூட பெரிய சைஸில் போட்டால் இன்னும் அமர்க்களமாக இருக்கும்!)

அடுத்த மாதம் - காமெடி கௌ-பாய் லக்கி லூக்கின் **"ஜேன் இருக்கப் பயமேன்?"** வருகிறது! காமிக்ஸ் எக்ஸ்பிரஸில் தொடர்கதையாகத் தொடங்கிட்ட கதை இது என்பது உங்களுக்கு நினைவிருக்குமே?! படிக்கத் தவறாதீர்கள்!

புத்தாண்டில் - "முகமூடி மாயாவி!" புது ஹீரோவா என்று யோசிக்கிறீர்களா? இல்லை! சிக்பில் காமெடி குழுவினரின் விலா நோகச் செய்யும் முழு நீளக் காமெடி கதையின் பெயர் இது! ஜனவரி '98 ரிலீஸ்!

பிப்ரவரியில் - நமது சூப்பர் கௌ-பாய் டெக்ஸ் வில்லர் சாகஸம்! பார்க்க பக்கம் 67!

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்! அது வரை - happy reading!

அன்புடன்,

**S. விஜயன்.**

P.S.: பக்கம் 68-ல் வாசகர் ஸ்பாட்-லைட் பாருங்களேன்...!

**பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,**
தபால் பெட்டி எண் : 374, 8/D-5, சேர்மன் P.K.S.A.A. ரோடு,
அம்மன் கோவில்பட்டி, சிவகாசி - 626 189. ஆசிரியர் : S. விஜயன்.
அச்சிட்டோர் : தி விஜய் புக்ஸ்,
Phone: 04562 - 21159/72649 Fax : 04562 - 21159


ஊஹூம்... தேறும்னு தோணலை...
பாரு இதை! போன வாரம் அந்த மெக்ஸிகன் மெக்கானிக் ஜோராத் தான் ரிப்பேர் பண்ணினான்... ஆனா... மறுபடியும் பூடுச்சே!
மோசமான பிரச்சனையோ?
என்னவெல்லாமோ பண்ணிப் பார்த்துட்டேன்... பலிக்கலை - மெயின் எஞ்சின்லேயே ஏதோ குளறுபடி...
தொலையுது... பக்கத்தில இருக்கிற கடலோர ஊரான கரோனடாவுக்கு போய் எதாவது செய்வோம்!
20 மைல் போகணும்... இழுத்துக்கிட்டுத்தான் போகணுமா - இல்லே அதுவரை தாக்குப்பிடிச்சுடுமா?
கரையோரமாவே போனா போயிடலாம்னுதான் தோணுது!
ஆனாலும் தூரம் அதிகம்தான் - வேற கிட்டத்திலே துறைமுகம் ஏதாச்சும் இல்லியா?
மேப்பை எடுத்து வா -பார்ப்போம்


ம் ம்... காலா ஸாண்ட்டா... -ரொம்ப தொலைவு - சரிப்பட்டு வராது
பச்சையா ஒரு சதுரம் போட்டிருக்கே -என்ன அது?
சரியா சொன்னே! தனியார் துறைமுகம் அது - போய் பார்க்கலாம்தான்.
துறைமுகம் வச்சிருக்கிறவர் கிட்டே கப்பல்களும் இருக்கும் - அவருக்கு நம்ம கஷ்டம் புரியும்... நிச்சயம் ஒத்தாசை பண்ணுவார்-
ஓ.கே... நாம இப்போ நேரா கரோனடா முனைக்குப் போறோம்
அதோ தெரியுது!
தனியார் துறைமுகம்னா நிச்சயம் அதோட சொந்தக்காரர் ஒரு கோடீஸ்வரராகவோ-மகாராஜாவாகவோதான் இருப்பார்... அச்சாவான இடத்தைத்தான் நீங்க தேர்ந்தெடுத்திருக்கீங்க கேப்டன்!
நாம வர்றதை அவங்களுக்கு சொல்லணு மில்லையா?
கேட்டுக்கோடா... பொடியா! தனியார் துறைமுகத்துக்குள்ளே போறோம்னா வர்றதை முன்கூட்டியே தகவல் தெரிவிக்கணும்கிறதுதான் கடல் பிரதேசத்திலே மரபு...
அது சும்மா ஒரு ஒப்புக்குத்தான்... மத்தபடி வரவேற்பு படு ஜோரா இருக்கும்... ஹம்ம் -நெருக்கத்திலே வந்தாச்சு!
ஹலோ...! கழுகு சரக்கு கப்பல்லேர்ந்து பேசறோம்... கப்பல்லே சேதம் ஏற்பட்டிருக்கு... உள்ளே வர அனுமதி வேணும்... முன்கூட்டியே நன்றியை சொல்லிக்கிறோம்.


ஆனால் - வரவேற்பு வேறு மாதிரியாக இருந்தது!
ஹலோ...! கழுகு...! உள்ளே வர உங்களுக்கு அனுமதி மறுக்கப்படுகிறது. உடனே, விலகிப் போயிடுங்க... இல்லேன்னா சுட வேண்டி வரும்... இன்னொருவாட்டி வார்த்தையாலே எச்சரிக்கை விடுக்கமாட்டோம்... ஜாக்கிரதை!
!?!
போங்க... அப்படியே திரும்பி போயிடுங்க -இல்லேன்னா சுட்டிடுவோம்
அட... பொறுங்கப்பா - கீழே வர்றேன்... பேசிக்குவோம்
துப்பாக்கி வச்சிருக்கானுக... திரும்பி போயிடலாம் கேப்டன்
அந்தப் பேச்சுக்கே இடமில்லை. கழுகை இங்கேதான் நிறுத்தறோம் - என்ன வந்தாலும் சரி
துப்பாக்கியை தூர எறிஞ்சுட்டு இந்தக் கயிற்றை முனையிலே இழுத்துக்கட்ட ஒத்தாசை பண்ணுங்க தம்பிகளா
!!



டேய்ய்... ஆள் தெரியாம மோதுறீங்க
பார்னே,... விடக்கூடாது - இதோ... நானும் வந்திட்டேன்...! டேய் பொடியா... நீ எஞ்சின் ரூமுக்குப் போ..., நான் நங்கூரத்தை விடறேன்...
சரி... பாஸ்
அங்கே என்ன நடக்குது? பாப்லோ... என் பைனாகுலரை எடுத்தா!
இந்தாங்க பாஸ்!
சத்!
டேய்... விருந்தாளிகளை வரவேற்கிற இலட்சணமாடா இது - பொறுக்கிப் பசங்களா...
அட... யாரது... அவ்னா? ஆமா... அவனேதான்!
கும்! கும்!
எஞ்சினை அணைச்சுடு ஜின்... ஏய்...பார்ன- எனக்கு கொஞ்சம் தமாஷை மிச்சம் வச்சிடு!
கும்! கும்! சத்!
துப்பாக்கி பிரயோஜனப்படாது... பொந்துக்குள்ளேர்ந்து கரப்பான் பொது பொதுன்னு வர்ற மாதிரி வந்துக்கிட்டே இருக்கானுக...
ஒண்ணை நகக்கினா...



....ரெண்டு வருது - கை ஓயலை...
ணொங்!
ரமோன்! ஓடிப்போய் அல்பான்ஸோவையும் ரென்போர்ட்டையும் கூட்டிவா... அவங்க வந்தால்தான் -
...கொஞ்சம் பொறு!
ட்ரிங்!
ஹலோ...! யார்... பாஸா! மேலேர்ந்து பார்த்தீங்களா... சரி ஸார். அப்படியா சொல்றீங்க... ஹலோ?
ஸார்... நிஜமாத்தான் சொல்றீங்களா... உங்க உத்தரவு செஞ்சுடறேன்..
நமக்கென்ன வந்தது...?
நிறுத்துங்க... அந்நியர்களை வரவேற்கிறோம்... அவங்களை எதிர்பார்த்து மாளிகையிலே பாஸ் காத்துக்கிட்டுருக்கார்... போன்லே விபரம் சொன்னார்...
அதை அவர் கொஞ்சம் முன்னாடியே சொல்லியிருக்கப்படாதா?
என் கூட வாங்க... முகட்டிலே இருக்கிற மாளிகைக்குப் போக விப்ட் இருக்கு
எங்க கப்பல் மேலே கை வைக்கக்கூடாதுன்னு உங்க ஆட்கள்கிட்டே சொல்லிட்டு வாங்க... எவனாவது அடாவடி பண்ணினா பல் டாக்டரை தேடிப் போக வேண்டி வரும் - ஜாக்கிரதை!



பிரண்ட்ஸாயிட்டோம்னு நெனைச்சேன்? துப்பாக்கியை இப்படி வச்சிக்கிட்டு வர்றானுகளே!
இங்கே சம்பிரதாயம் அப்படி...! உம் மேல ரொம்ப பிரியம் ஏற்பட்டுடிச்சினா வெற்றுத் தோட்டாவாலே சுடுவாங்க...
ம் ம்... ஓனர் வசதியான ஆசாமிதான் போலிருக்கு... இந்த உயரம்போறதுக்குக் கூட 'லிப்ட்' தேவையா என்ன?
எங்க கூட யாரும் வரலியா?
தேவையில்லை மிஸ்டர் பிரின்ஸ்... வரவேற்பு சற்று முரட்டுத்தனமா இருந்திட்டுது - ஸாரி!
உன் பேரை சொன்னானே அவன் எப்படி?
ஆமா... எப்பிடி தெரிஞ்சிருக்கும்?
என்ன ஒரு ஆடம்பரம் அடேங்கப்பா!
வந்த இடத்திலே கண்டபடி பேசக்கூடாது.. ஜின்
உங்களுடைய வருகை ஆச்சரியத்தையும், மகிழ்ச்சியையும் தருகிறது தோழர்களே... என் எளி குடிசைக்கு உங்கள் வரவு நல்வரவாகுக.


ஆமாம்... -நானேதான்!
ஏற்கனவே பிரின்ஸ் குழுவினருக்கு அறிமுகமானவன் இவன். பார்க்க - ஜூன் 1994 லயன் காமிக்ஸ் "ஒரு திகில் பயணம்" (இதழ் நிர: 101).
ப்ரான்ஜென்!
ம் ம்... கர்ட் ப்ரான்ஜென்! லம்பாஷியில் ஒரு பிரபல தொழிலதிபர்! உலகம் ரொம்ப சுருங்கிவிட்டது - இல்லையா?
ஆனால் அதெல்லாம் பழங்கதை... அமருங்கள் -நட்புறவோடு உரையாடுவோம்
நினைச்சுப் பார்த்தா வேடிக்கையா தோணுது... காணாமல்போன விமானத்துக்கு அந்தக் கதி ஏற்பட்ட பிறகு ஆப்பிரிக்காவிலே எனக்கு எதிர்காலம் இல்லைன்னு ஆயிட்டுது... புது வாழ்க்கை ஆரம்பிக்கிற தீர்மானத்தோட இங்கே கரோனடா வந்து இன்னமும் ஆரம்ப கட்டத்திலே இருக்கிற இந்த தொழிலை ஆரம்பிச்சேன்...
இந்த தொழில்னா -கடத்தல் விவகாரமா?


தேர்மையான வியாபாரம் - மாமிசம் ஏற்றுமதி பண்றேன்... சொல்லிக்கிற மாதிரியான பெரிய ஆட்டு மந்தை இங்கே எனக்கு சொந்தமா இருக்கு!
அதிர்ஷ்டக் காற்று என் பக்கமா வீசுது... எதிர்பார்த்ததை விட வெற்றியாயிட்டு வருது... அங்கே நீங்க பார்த்த சொகுசு கப்பல் இந்த ஆடம்பர மாளிகை இப்படி ஏதேதோ எனக்குச் சொந்தமாயிருக்கு.
CIGARROS
எங்களுக்கு டக்கரா வரவேற்பு கொடுத்த தனிப்படை கூட ஒரு வசதிதான்!
CIGARROS
என்ன செய்யறது... நாங்க ரொம்ப ஜாக்கிரதையா இருக்கவேண்டியிருக்கு... பிரதேசம் முழுக்க கட்டுக்குள் இல்லை... ஊடுருவல் பேர்வழிகள் ஏராளம்
அப்போது-
கும்!
ஒரு வழியா விரட்டிப் பிடிச்சுட்டோம் பாஸ்... இதோ இருக்கான் பாருங்க!
!!?
இன்னிக்கு எல்லாமே விநோதமா நடந்துக்கிட்டிருக்கு... நாம சந்திச்சு வெகு காலமாயிட்டுது - இல்லியா... எமிலியோ?
சைத்தானே... நீ நாசமாகப் போக!


யார் இந்த ஆள்? இவனை இப்படி கூட்டிக் கொண்டு வரக் காரணம்?
அலட்டிக்காதே - சட்ட பூர்வமான காரியம்தான் . பண்ணியிருக்காங்க... என்னோட ஆளுங்க!
போலீஸ்கிட்டே ஒப்படைக்கப் போறோம்... ஜெயில் வாசம் காத்துக்கிட்டிருக்கு இவனுக்கு
திருடனா? கொள்ளைக் காரனா?
இவனுக்கு கைவராத தொழிலே கிடையாது... எமிலியோ உன்னை எப்படி நான் இவர்களுக்கு அறிமுகப்படுத்த? -வழிப்பறி திருடன் என்றா இல்லை கால்நடைகளை திருடுவதில் ஸ்பெஷலிஸ்ட் என்றா?
இவனும் இவனுடைய பயங்கரவாத கும்பலும் எனக்கு ஏற்படுத்திய இழப்புக்கு அளவேயில்லை... எப்படியும் ஒருநாள் அகப்படாமலா போவான் என்று நம்பிக் கொண்டிருந்தேன்.
கார்ஸியாவின் வீட்டில் இவனை மடக்கினோம் பாஸ்.
காயத்திற்கு மருந்து வாங்க பார்மஸிஸ்ட் கார்ஸியாவின் வீட்டிற்கு நான் போயிருந்த போது என்னை பிடித்தார்கள்... இப்படிப்பட்ட குள்ளநரித் தந்திரம் உன்னைத் தவிர வேறு யார் செய்வார்கள் ?
உன்னை நான் வற்புறுத்தவேயில்லை... உன் தரிசு நிலத்திற்கு ஏகப்பட்ட விலை கொடுக்க முன் வந்தேன். முட்டாள் நீ - என்னை கட யத்தனித்தாய்.
குறி தப்பிவிட்டதுதான் துரதிர்ஷ்டம்
இத்தோடு முடிந்து விடாது... என் லெப்டினெண்ட் 'ஓநாய்' பழி வாங்காமல் விடமாட்டான்! உன் சொத்துக்கள் தீக்கு இரையாகும்... உன் தனிப்படை ஆட்களுக்கு ஒட்டு மொத்த சமாதி கட்டப்படும்...



கேட்டாயல்லவா? வித்தியாசமான ஆசாமி இவன். எரித்துவிடுவேன் என்று காட்டுமிராண்டிகள் பாஷையில் பேசுகிறான்... இவனை எல்லாம் எப்படி தண்டிக்க வேண்டும் என்று போலீஸாருக்குத் தெரியும்!
ஜாக்கிரதை!
ணங்!
நீசனே... உன்னை நான் கொல்லாமல் விடமாட்டேன்
ம்ம்ம்ம்ப்...
நோ!
உணர்ச்சி வசப்படாதே அப்பனே
டுமீல்!
இந்தாப்பா... நீயும் கொஞ்சம் பொறுமையா இருக்கணும்! அடாவடியா ஏதாவது பண்ணி வீணா உயிரைப் போக்கிக்காதே...
அந்த கிறுக்கனை கட்டிப் போடுங்கள். அவனை அப்புறமாக நான் விசாரிக்கிறேன்... என் மூக்கு உடைந்துவிட்டது... டாக்டர் கோமேஸுக்கு தகவல் கொடு!


நீங்க பயப்படற மாதிரி ஏதுமில்லை... லேசான இரத்தக்கட்டுதான்... நாலைஞ்சு நாள்லே சரியா போயிடும்!
சண்டாளன்
இந்த எமிலியோ திருட்டுக் கும்பலுக்கு தலைவனா? பார்த்தால் அதிகம் சிந்திக்கத் தெரிந்தவனாட்டம் இருக்கிறான்... பின்னே ஏன் திருட்டுத் தொழிலில் இறங்கினான்?
இவனுகளை உனக்குத் தெரியாது பிரின்ஸ்... அத்தனை பேரும் மொள்ளமாறிங்க!நான் இங்கே வந்தப்போ எதுவுமே ஒழுங்கா இல்லை!
விவசாயிகள் பத்தாம் பசலித்தனமான முறையிலே விவசாயம் பண்ணிக் கிட்டிருந்தாங்க... சொற்ப மகசூல் - வறுமையிலே உழன்றுக்கிட்டிருந்தானுக...
அதை எல்லாம் நீங்க மாத்தினீங் களாக்கும்?
பின்னே? இந்த தரிசு நிலத்தை கால்நடைகளாலே நெறைச்சேன்... ஏகப்பட்ட மந்தைகள்... இதுமாதிரி பெரிய அளவில் இதுவரை யாரும் மாமிசம் ஏற்றுமதி பண்ணியதேயில்லை என்று உலகம் பேசப்போகிறது பாரேன்
என்னோட வளர்ச்சியைக் காணப் பொறுக்கலை இவனுகளுக்கு... பொறாமை... வயித்தெரிச்சல்... என்னோட கால்நடைகள் இவனுகளோட மூணு தக்காளிகளை, ரெண்டு பீன்ஸ் காய்களை அழிச்சுட்டதா ஒப்பாரி வைக்கிறானுக...!
அதே சமயம் வெளியே-
உன்னோட வசந்த மாளிகை இதுதான் எமிலியோ - பிடிச்சிருக்கா?
பிடிச்சுத்தானாகணும்...! ரொம்ப நாளைக்கு இங்கேதானே இருக்கப்போறே!



பரிகாசமா பண்றே... இரு... இரு - என்னை உயிரோட விட்டு வச்சதுக்கு நிச்சயம் சீக்கிரமே வருத்தப்படப்போறீங்க.
இப் போதைக்கு நான் செய்ய வேண்டியது ஆங்...! அது போறும்...!
'ஓநாய்' கிட்டே உடனே கொண்டு போய் கொடு...!
சரி...
அங்கே-
ஜோர்...! ப்ரான்ஜென் நம்மை நல்லாத்தான் கவனிச்சுக்கிறார்.
உள்ளூர் கலவரத்தினாலே நமக்கு கஷ்டம் ஏதும் வராது... அத்தோட கப்பலை செப்பனிட்டு முடிக்கிற வரைக்கும் நாம இங்கே நிம்மதியா ஓய்வெடுக்கலாம்!
நப்பங்கப்பா... என்னா சொகம்டா சாமி... சொர்க்கம் மாதிரி தோணுது
உனக்கு வயசாயிட்டுதுன்னு அர்த்தம்... சீக்கிரமே ரிடையர் ஆயிடுவே


நான் - ரிடையர் ஆவேனா...? கேப்டன்கிறதாலே தலையணை... இல்லேன்னா கத்தியலே எறிஞ்சிருப்பேன்!
பொத்
உடம்பிலே உசிரு இருக்கிற வரைக்கும் இந்தப் பார்னே ஓய்ஞ்சு உட்கார்ந்திருக்க மாட்டான்... மனுஷன் தேய்ஞ்சு அழியலாம் - துருப்பிடிச்சி அழியலாமோ?
என்ன இழவு இது -
எங்கே போச்சு இந்த தலையணை...? அது இல்லாம தூங்க முடியாது போலிருக்கே...
ஹாவ்!
??
ஏய்ய்... யார் நீ-
பிரின்ஸ்...! இங்கே ஓடியா...
வீணாக் கத்தி ஊரைக கூட்டாதே... பேசினியோ கட்டுத் தள்ளிடுவோம் - ஜாக்கிரதை!


யார் நீங்க... எதுக்காக வந்திருக்கீங்க - பளிச்சினு சொல்லுங்க! நிச்சயமா எங்களோட கண்ணாமூச்சு ஆட வரலைன்னு மட்டும் தெரியுது
ஹா... இவன்தாய்யா ஆம்பளை - என்ன தெனாவட்டா பேசறான் பாரேன்.
உல்லாச ஊர்வலமா உங்க மூணு பேரையும் கூட்டிப் போக வந்திருக்கோம் - நடக்கிறீங்களா?
விர்ர்ர்
இங்கே திரும்பி வருவோமில்லே?
நிச்சயமா!
ப்ரான்ஜெனோட ஆட்களை உஷார்படுத்த நீங்க என்ன செஞ்சாலும் அதுக்காக உடனடியா வருத்தப்படற மாதிரி இருக்கும்... கப்சிப்னு நடக்கணும் - புரிஞ்சுதா?
இதை நீ எப்படி அனுமதிக்கிறே?
வேற வழி? அத்தோட விஷயம் சுவாரஸ்யமானதா படுது... என்னதான் நடக்குது -பார்ப்போமே
சரி... கிளம்புவோம்
இன்னிக்கு ஏதேதோ நடக்குது...
சைலன்ஸ்!


நூறு மீட்டர் தொலைவில் நமக்காக குதிரைகள் காத்துக்கிட்டிருக்கின்றன
ஓ... என்ன ஒரு டக்கரான ஏற்பாடு!
வழியில் ஒரு காவலாளிகூட கண்ணில் பட வில்லையே
சமையல் கட்டில் எங்க ஆள் ஒருத்தன் இருக்கிறான். உணவில் மயக்க மருந்தை கலந்திட்டதாலே எல்லோரும் ஜோரா. தூங்கறாங்க
நீங்க எமிலியோவோட ஆட்கள்னு புரியுது. அவனை விடுவித்து அழைச்சுப் போகாம ஏன் எங்களை கூட்டிப் போறிங்கன்னுதான் விளங்கலை.
நியாயமான கேள்வி!
சிறையிலே ஒரு கண்காணிப்பு கோபுரம் இருக்கு... அங்கே நிக்கிற ஆட்களை தூக்கத்திலேகூட விழ்த்த முடியலை... அங்கே போய் கைவரிசையைக் காட்டினா இரத்த ஆறு ஓடும் - அதான்.
இதிலே எங்களுக்கு என்ன ரோல்?


சொல்றதுக்கு எனக்கு அனுமதியில்லை மிஸ்டர் பிரின்ஸ்... நாங்கள் எமிலியோவின் உத்தரவை நிறைவேற்றுகிறோம் - அவ்வளவுதான்! உங்களுக்காக ஒரு திட்டம் வச்சிருக்கார்.
?
பணம் பறிக்க நெனைச்சு நம்மை கடத்தி போறாங்கன்ற. பாவம் நல்லா ஏமாறப் போ ஸ்காட்லாண்டிலே ஒரே ஒரு தூர சொந்தக்கா இருக்கான் எனக்கு - என் பொருட்டு பை பெயராது அவன்கிட்டேர்ந்து!
இது வேற ஏதோ ஒரு பெரிய சிக்கல் மாதிரி தோணுது...
வந்திட்டிருக்காங்க எல்லோபோ - போன காரியம் பழம் போலிருக்கு... வெள்ளையர்களும் கூட வர்றாங்க!
ம் ம்... அவங்க போறாத கால
அவங்க இங்கே வர்றதிலே உங்களுக்கு சந்தோஷமில்லை போலிருக்கு...
தப்பா சொல்றே மானுவல்!
அடுத்து இங்கே நடக்குதுன் பார்த்துக்கிட்டே முதல்லே நான் போய் விருந்தாளிகளை முறைப்படி வரவேற்கணும்...
எல்லோபோ இப்படி விஷமப் புன்னகை செய்தால் யாருக்கோ தலைவலின்னு அர்த்தம்... நல்ல வேளை, அந்தப்பட்டியல்லே நான் இல்லை.


புரட்சி முகாமுக்கு உங்கள் வருகை நல்வரவாகட்டும் தோழர்களே
உற்சாகமா குரல் கொடுக்கிற அந்த ஆசாமிதான் எமிலியோ இல்லாத வேளையிலே இங்கே தலை... னா?
எமிலியோவோட லெப்டினெண்ட்...! அவங்கிட்டே தமாஷ் பண்ணாதே பிரின்ஸ்...!
உங்களை சந்திச்சதிலே சந்தோஷம்... இதை உங்க வீடுமாதிரி நெனைச்சுக்கலாம்.
உங்க அன்பை என்னான்னு சொல்ல?
காட்டறேன்! டோனியோ, பெலிப்... நாலைஞ்சு நாற்காலிகள், ரெண்டு பாட்டில் விஸ்கி - சீக்கிரம் கொண்டாங்க.
ஓ... ரொம்ப தாங்க்ஸ்
உங்களோட வருகை எங்களுக்கு கெடைச்ச கௌரவம் மிஸ்டர் பிரின்ஸ்... வாங்க அதைக் கொண்டாடுவோம்


அவ்னோட பார்வையிலே குள்ள நரித்தனம் ஒளிஞ்சிருக்கு... அவன் சொன்ன கொண்டாட்டத்திலே நாம பலியாகப் போறோமோன்னு தோணுது . . .
சூப்பர் விஸ்கி இது... ஸ்பெஷல் தயாரிப்பு - ஊத்திக்கிட்டா மின்சார வயரை தொட்டா மாதிரி இருக்கும் . . .
உசிரை குடிச் சிடுமா...?
இங்கிலீஸ்காரங்க மனுஷ ஜென்மங்களே இல்லைன்னு சில கஸ்மாலங்கள் சொல்லும்... அப்படியில்லைன்னு இதை நீங்க குடிச்சு நிருபிச்சுக் காட்டணும் . . .
பொறி வைக்கிறான்... அவனோட ஆட்களுக்கு முன்னாடி கோமாளியா நான் ஆடணும்னு ஆசைப்படறான். ஒருத்தன் எவ்வளவு குடிக்கிறான்கிறதை வச்சு அவனோட ஆண்மையை அளக்கிற கும்பல் போலிருக்கு!
இந்தா மிஸ்டர்... வாங்கி அப்படியே ஊத்திக்கோ.
என்னைக் கடத்திக்கிட்டு வர்றதுக்கு சித்தே முன்னாடிதான் நான் பல் துலக்கினேன்... இங்கிலீஷ்காரங்க அதுக்குப் பிறகு அன்னிக்கு எதுவுமே சாப்பிடறதில்லை... குடிக்கிறதில்லை!
என்னோடு சேர்ந்து குடிக்க நீ மறுப்பதாக இதை நான் எடுத்துக் கொள்கிறேன்... மகாபாதகமான செயல் இது
ஓ கதை அப்படிப் போகுதா... இந்தாப்பா அதை இப்படிக் கொடு


உன்கூட ஒரு இங்கிலீஷ்காரன் சேர்ந்துக்கணும்... அவ்வோதானே - அது பிரின்ஸாத்தான் இருக்கணும்கிறதில்லையே...! என்ன ஞாயமாத்தானே பேசறேன்! சரி... எடுத்து வைங்கப்பா... பாட்டில்களை!
ார்னே... கிறுக்குத்தனமான வால் இது - தற்கொலைக்கு ஒப்பானது
உள்ளூர் வழக்கத்துக்கு - அது எப்படிப்பட்டதா இருந்தாலும் - மரியாதை கொடுக்கணும்கிற கொள்கையுடையவன் நான். கமான்... நீ ரெடியா?
சொட்டு பாக்கி வைக்காம குடிக்கணும் -புரிஞ்சுதா?
சரி... ஆரம்பிப் போமா!
இந்தக் கொடுமையை பார்க்கிறது பாவம்!
ரெண்டு பேரும் ஒரே வேகத்திலேதான் போறாங்க!
கடக்!
மடக்!


இப்ப என்ன சொல்றே?
தூள் கிளப்பிட்டே பார்னே... பயங்கரமான ஆள்தான் நீ
அப்படி என்ன பெரிசா சாதிச்சுட்டேன்னு பாராட்டறே!
ஆட்டம் இன்னமும் முடியலை...! நான் போதும்னு சொல்ற வரை குடிச்சுக்கிட்டே இருக்கணும்... அடுத்த பாட்டிலை எடுத்துக்கோ தாடிக்கார வெள்ளையனே!
நோ... சூழ்ச்சியை இத்தோடு நிறுத்து... உன் பாஸ் எமிலியோவை அங்கே ப்ரான்ஜெனோடு பார்த்தேன்... அவரை மாதிரி ஒரு உத்தமர் இந்த மாதிரி அடாவடி காரியத்தை நிச்சயம் அனுமதிக்கமாட்டார்!
ஆனா எமிலியோ ஜெயிலிலேல்ல இருக்கார். இப்போ இங்கே என்னோட ராஜ்ஜியம்தான்... நான் சொல்றேன் குடின்னு. வெள்ளைக்காரப் பசங்கள்லாம் சின்னப் பொண்ணுக மாதிரின்னு இப்போ நான் நிரூபிச்சுக் காட்டறேன்...!
தடுக்காதீங்க கேப்டன்... அந்த கொரில்லா போதையிலே இருக்கான். கோயிச்சுக்கிட்டான்னா நாம அழிஞ்சுபோயிடுவோம்
பார்னே உன்னை நான் அனுமதிக்க மாட்டேன்... இந்த விஸ்கி உன்னைக் கொன்னுடும்!
பொடியா... பயப்படாதே. -பார்னே யார்னு பயலுகளுக்கு புரிய வைக்கிறேன்...



ஏய் கோமாளி - இது உன்னோட நலத்துக்கு...
குட... குட... குட...
டியர்... ஓ... வோவோ...
ஹைய்யா... சவால்லே நான்தான் ஜெயிச்சேன்... இதை யாரும் மறுக்க முடியாது!
மிஸ்டர் இந்த மாதிரி சவால்கள் எல்லாம் இங்கே சகஜம்... உங்க பிரண்டு உங்க கௌரவத்தை காப்பாத்திட்டார்!
இங்கே எவ்வளவோ சமூக சீர்திருத்தங்கள் நடந்தேற வேண்டியிருக்கு!
ஹே... ஹீரோ - எங்கே கிளம்பிட்டாப்லே?
நெறைய குடிச்சேன்ல... அடுத்து எங்கே போவேன்னா தெரியாதா என்ன?


அக்கம் பக்கத்திலே யாரும் இல்லை.
குட்!
சுத்த கிறுக்கனா இருப்பான் போல இருக்கே... இவன் கிட்டே எப்படித் தான் நடந்துக்கிறது?
அவன் விழுந்து கிடக்கிறதாலே நமக்கு கொஞ்சம் இடைவேளை கிடைச்சிருக்கு... கிடைச்சிருக்கிற அவகாசத்திலே ஏதாவது செய்யணும்
நல்ல யோசனை மிஸ்டர் பிரின்ஸ்...! என் பேரு பெப்...
பெப்... யார் இந்த எமிலியோ? ஒரு சின்ன ராபின் ஹுட்டா? அதாவது பணக்காரங்ககிட்டே பிடுங்கி ஏழைகளுக்கு வாரிவிட்றவரா?
இல்லே ஸார்! எமிலியோவும் சரி எல்லோபோவும் சரி ஆரம்பத்திலே எங்களை மாதிரி குடியானவங்கதான்... அக்கம் பக்கத்திலே ஈடு இணை இல்லேங்கிற மாதிரியான பெரிய திராட்சைத் தோட்டம் எமிலியோகிட்டே இருந்துச்சு!
ஓகோ...? அப்புறம் ரெளடி பசங்க வந்து புகுந்துட்டாங்களாக்கும்?
ஒருநாள் ப்ரான்ஜென் இங்கே வந்து சேர்ந்தார்... அவரோட கார் வந்து நின்னப்போ நான் அங்கேதான் இருந்தேன்.
ஏய்... கடாமாடு - நீதான் இந்த இடத்துக்கு சொந்தக்காரனா?
ஆமா... -ஆனா...


சரி... இந்த பேப்பர்லே அடியிலே கையெழுத்துப் போடு... தற்குறின்னா ஒரு பெருக்கல் குறி போட்டு கைநாட்டு வை... உனக்கு நான் 300 டாலர் தர்றேன்... சரியான பேரம்
இங்கிலீஷ்லேல்ல எழுதியிருக்கு... புரியலியே - என்ன எழுதியிருக்கு இதிலே?
300 டாலர்கள்... -அப்படின்னா ஏகப்பட்ட பெசோக்களுக்கு சமம் எமிலியோ!
இந்த பொட்டல் காட்டில் கால்நடை தீவனம் பயிரிடப் போறேன்... உன் வீட்டையும் நிலத்தையும் எடுத்துக்கறேன்... பத்திரமும் பணமும் இதோ இருக்கு... அடிச்சது யோகம்னு சொல்லிக்கிட்டே கையெழுத்தைப் போடு
இந்த வீட்டைக் கட்டவும், திராட்சை தோட்டத்தை பராமரிக்கவும் என் பெற்றோரும், மூதாதையர்களும் எடுத்துக்கிட்ட சிரமங்கள் ஏராளம். இதை நான் விக்கிறதா இல்லை... நீங்க போயிட்டு வாங்க
அவன் என்ன சொல்றான்!
?!
எமிலியோ - ஆபத்து!
ஓ...நோ
பளாரர்
ஏய்... பிசாசே... அவரை அடிக்காதே
சொறி நாயே... -உன்னை...



அட... சும்மா துள்ளாதேடா சோமாறி...
எது நல்லது எது கெட்டதுன்னு உன் புருஷனுக்கு தெரியலை. அவன் கிடக்கான்... நீ போடு இதிலே - கையெழுத்து!
போடாட்டி...?
கால்நடைகள் தறிகெட்டு ஓடி தோட்டங்கள்லே புகுந்து நாசம் விளைவிக்கிறது தற்செயலா நடக்கிற சம்பவங்கள்தான்..! யாரையும் பழி சொல்ல முடியாது... நான் சொல்றது புரியுதுல்லே? அப்புறமா நொந்து போறதிலே அர்த்தமில்லை!
சரி... கொண்டா கையெழுத்துப் போடறேன்... நாங்க போயிடறோம். எமிலியோவை துன்புறுத்தாதீங்க...
அத்தோட 300 டாலர்கள் கிடைக்கும்... எவ்வளவு தாராள மனசு எனக்கு பார்த்தியா?
பணத்தை வாங்கியாச்சுல்லே... ஒரு மணி நேர அவகாசம் தர்றேன்... - இடத்தை காலி பண்ணிட்டு ஓடிப் போயிடுங்க... கண்காணாம
அன்னிக்கு ராத்திரியே தோட்டத்தை தீ வச்சு அழிச்சானுக ப்ரான்ஜெனோட ஆளுங்க... இங்கே இருந்த ஒவ்வொருவருக்கும் இதே அனுபவம்தான்.
எல்லோபோ, டோனியோ, பெலிப் ஆகியோரின் பண்ணைகளையும் என் நிலத்தையும் அவன் பிடுங்கிக்கிட்ட கதையை விபரமா சொல்லட்டுமா?
வேண்டாம்... சொல்லாமலே புரியுது எனக்கு...


ப்ரான்ஜெனின் அட்டூழியத்துக்கு முடிவு கட்டத்தான் நாங்க இங்கே ஒன்னு சேர்ந்திருக்கோம். எங்கள்லே எமிலியோ புத்திசாலிங்கறதாலே தலைவரா இருக்காரு...
இங்கே ப்ரான்ஜெனின் அதிகாரம்தான் கொடிகட்டிப் பறக்குது போலிருக்கு!
கவர்னரை பார்த்து முறையிட எமிலியோ முயற்சி பண்ணினார்... சுற்றி இருக்கிற காவலர்களும், அதிகாரிகளும் அனுமதி தர மறுத்திட்டாங்க.ஹூம்... என்ன இருந்தாலும் நாங்க ஏழை குடியானவங்கதானே..
ஓகோ...
அதனாலேதான் எமிலியோ என்னை இங்கே கொண்டாந்திருக்காறா? ஹே... அதோ நடமாடும் பீப்பாய் வந்தாச்சு!
நக்கலா பண்றே...? 'கழுகோட' கௌரவத்தை நிலை நாட்டினது நான்தான் - மறந்திடக்கூடாது!
நம்ம கௌரவத்தை லிட்டர் கணக்கிலே அளக்கிறதா இருந்தா நீ சொல்றது சரிதான்... உன் அனுபவம் நல்லாத்தான் கைகொடுத்துச்சு பார்னே
பயங்கர விஸ்கி அது... நான் பண்ணினது நெஜமாலுமே வீர சாகஸம்தான்... வேற யாரா இருந்தாலும் கட்டையா சாஞ்சிருப்பாங்க...
அதோ... பார்த்தீங்கள்லே - பய எப்படி நிலை குலைஞ்சு போயிட்டான்னு..


தோல்வியை எப்படி அவன் ஏத்துக்கறான்னு பார்க்கணும்
உன்னைப் பற்றி பிதற்றினதை எல்லாம் வாபஸ் வாங்கிக்கிறேன் பா! இனி எனக்கு நீதான் குரு...
அறிமுகபடலம் ஒருவாறா முடிஞ்சுட்டுது... இனி பிரச்சனையை பற்றி கொஞ்சம் சீரியஸா விவாதம் பண்ணுவோமா?
தன் ராஜாங்கத்தை நிர்மாணிக்க ஏழைகள் வயித்திலே அடிச்சி எல் லாத்தையும் புடுங்கிக்கிட்டான் அந்த அக்கிரமக்காரன் ப்ரான்ஜென்... பயமுறுத்தி நரித்தனமா எல்லார்கிட்டேயும் பத்திரத்திலே கையெழுத்தை வாங்கிக்கிட்டான்.
கழுகிலே ஒரு பீரங்கி வச்சிருக்கணும்னு ரொம்ப நாளா நான் சொல்லிக்கிட்டே இருக்கேன்... அப்படி இருந்ததுன்னா இப்போ
இந்தப் பகுதிஜட்ஜுகளையும்ஜூரிகளையும் ப்ரான்ஜென் பணம் கொடுத்து கைக்குள்ளே போட்டுக்குவான் - சீக்கிரமே!
கவர்னர் மட்டும் விதிவிலக்கா என்ன? ஏழைகளுக்கு எட்டாத தொலைவிலே சொகுசா இருக்கார்... ப்ரான்ஜெனின் செல்வச் செழிப்புதான் அவருக்கு சந்தோஷத்தை தரும்... ஏழைகளின் கண்ணீரைப் பத்தி கவலைப்பட நேரம் இருக்காதுதான்


அதனாலேதான் ப்ரான்ஜெனுக்கு எதிரா நாங்களாகவே போர்க்கொடி உயர்த்தியிருக்கோம். துப்பாக்கிகள்தான் நமக்கு நியாயம் தேடித்தர்ற வக்கீல்கள்!
எப்படியாவது எமிலியோவை நாம மீட்கணும்... அப்புறம் ப்ரான்ஜெனின் மாளிகையிலே டைனமைட் வச்சு அதைத் தூள்தூளாக்கணும்... ஹா... அது மட்டும் நடந்திட்டா...?
நடந்திட்டா...?
பிரச்சனை தீர்ந்திடுமா? அங்கே உயிர்தப்புறவங்க உங்க மேலே வெறியோட பாயமாட்டாங்களா?
படுமோசமான விளைவு ஏற்படும் நாசம் உங்களுக்கும் தான் விளையும் உன்னோட திட்டத்தை நான் ஒத்துக் கொள்ளமாட்டேன்!
அப்படின்னா... எல்லோபோ சொல்ற மாதிரி பொறுமையா காத்திருக்கணும்கிறியா?
நாம் செயல்படணும் - ஆனா, நிதானத்தோட...! கவர்னருக்கு சின்னதா ஒரு அதிர்ச்சி கொடுப்போம் - ஒரு தொடக்கமாக!
?
பல மணி நேரத்திற்குப் பின்னர் அந்த புரட்சி முகாமில் அன்றாட அலுவல்கள் முறைப்படி நடந்து கொண்டிருந்தன...
பெப்... வெள்ளையர்கள் இன்னமும் தூங்கிக் கொண்டிருக் கிறார்களா?
தூக்கமா?



முழுசா ஒரு மணி நேரம்கூட அவங்க கண் அயரலை! நேற்றிரவு அவ்வளவு நடந்தப்புறம் அவங்களுக்குத் தேவை ஒரு நீண்ட தூக்கம்... ஆனாலும் அவங்க தூங்கலை!
எல்லோபோவோட ரொம்ப நேரம் விவாதம் நடத்தினாங்க... கேப்டன்னு அவங்க சொல்ற ஆளுகிட்டே எல்லோபோ பொறுப்பை விட்டுட்டார்... இங்கிலீஸ்காரங்களைப் பத்தி ஆரம்பத்திலே எல்லோபோவுக்கு இருந்த தப்பபிப்ராயம் இப்போ இல்லை...
உண்மையில் -
இந்த வரைபடம் மட்டும் தப்பில்லாம இருந்தா நம்ம திட்டம் பலிக்கும்...
அந்த சந்தேகமே உங்களுக்கு வேண்டாம்!
ஆபத்தே இல்லைன்னு சொல்லமாட்டேன்... ஆனா வீணா பீதியடைய தேவையில்லை .. கச்சிதமா காரியத்தை செஞ்சி முடிச்சிடுவோம்.
வாட்சுகளை ஒரே நேரத்துக்கு வச்சுக்குவோம்... எமிலியோவின் வாட்சை என்கிட்டே கொடுத்ததுக்கு நன்றி... லிடி ஆப் ஸீ போய்ச் சேர எவ்ளோ நேரம் பிடிக்கும்?
படைகளை திரட்ட ஒரு மணி நேர அவகாசம் பிடிக்கும்... கிளம்பினா ராத்திரி பதினோரு மணிக்கு போய்ச் சேர்ந்திடலாம்.
சரி... அப்போ நாம காரியத்தைக் கவனிப்போம்... பொடியா நீ போய் மறுபடியும் தூங்கு . . .
எல்லோரும் இங்கே வந்து கூடுங்க... ரொம்ப அவசரம்



நண்பர்... கவனமா கேளுங்க... இன்றைய தினம் நமக்கு ரெ... முக்கியமான நாள்... சிறையிலே இருக்கிற நம்ம தலை... எமிலியோ ஒரு புதுத் தலைவரை அனுப்பி வச்சிருக்க... இவர் நமக்கு வெற்றி ஈட்டித் தரப்போகிறார்.
பெயர் - பெர்னார்டு ...ன்ஸ்...! புரட்சிப்படை
...சரப்பட்டு ...ர்த்தைகளை ...ட்டாதே...
ஆளப்பார்த்தா அப்படித் தெரியலை! பொம்மனாட்டி மாதிரி இருக்கு!
...ப்... என்ன ...ான்னே?
மிஸ்டர் பிரின்ஸ்... நீங்க பேசுங்க! யாரும் குறுக்கிடமாட்டாங்க!
எல்லோரும் உங்க பேச்சை கேட்பாங்கல்லே... மிஸ்டர் லோபோ?
இந்தப் பிராந்தியத்தின் கவர்னர் மிஸ்டர் டைகோ வர்காஸ்தான் நியாயத்தை இங்கே ஊர்ஜிதப்படுத்த முடியும்... அவர் ஸிடி ஆப் ஸீயில் இருக்கிறார்னு உங்களுக்குத் தெரியும்...


ப்ரான்ஜெனும் அவனோட ஆட்களும் அவரை சுத்தி இருக்காங்க. அதனாலே உங்களாலே அவரை நெருங்க முடியலை... அவருக்கும் உங்க பிரச்சனை தெரியாது! ப்ரான்ஜெனோட வளையத்தை ஊடுருவிப் போய் நாம கவர்னரை சந்திக்கணும்... தாமதமானா ப்ரான்ஜென் உங்களை நிர்மூலமாக்கிவிடுவான்.
நானும் எல்லோபோவும் உங்களை ஸிடி ஆப் ஸீக்கு வழிநடத்திப் போறோம்... நம்மோட பிரச்சனையை கவர்னர் செவி கொடுத்துக் கேட்பார் என்பதிலே யாருக்கும் சந்தேகம் வேண்டாம். சட்டப்படி உங்க நிலங்கள் உங்களுக்கே திரும்ப கிடைக்கும். ம்ம்... கிளம்புங்கள் ஸிடி ஆப் ஸீ நோக்கி!
இதற்கிடையே ப்ரான்ஜெனின் இடத்தில் -
கண்ணெதிரே கடத்திட்டு போயிட்டாங்களா... காவலாளிகளோட தோலை உரிக்காம விடப்போறதில்லை
ஆனா... வந்து -
பிரின்ஸும் அவனுடைய சகாக்களும் கைதிகளா இருக்கலைங்கிறது வாஸ்தவம்தான்... ஆனாலும் கவனமாப் பார்த்துக்க வேணாமோ? உங்க ஆட்கள் திங்கத்தான் லாயக்கு... கேப்டன்.
நல்ல வேளை... எமிலியோ இன்னமும் நம்மகிட்டேதான் இருக்கான். அங்கே இப்போ அந்தப் புரட்சிக்காரங்க வைக்கிற ஒப்பாரியை கேட்டுக்கிட்டிருப்பான் பிரின்ஸ்...
எதையும் அப்படியே உணர்ச்சி பூர்வமா எடுத்துக்கிற முட்டாள் அவன்... இங்கே அடுத்து என்ன வேணும்னாலும் நடக்கலாம். சில முன்னெச்சரிக்கை நடவ... அவசியம்... காவலை ...க்குங்க கேப்டன்.
அப்போ... நீங்க?



ர் கிட்டே கூடுதல் ஆள் பச் சொல்லி கேட்கணும்! யிலேயே கிள்ளிடணும் ன்னா ஆபத்தாயிடும் - வ கிளம்பறேன் நாளை திரும்பிடுவேன்.
என் பேச்சை கவர்னர் கேட்பார்... இன்னிக்கு அங்கே தடபுடலா ஒரு பார்ட்டி நடக்குது... அதனாலே ஜாலி மூடிலே இருப்பார்... ஸிடி ஆப் ஸீக்கு விடுப்பா டிரைவர்....
சிக்காரங்களாலே இங்கே வரும்னு பயந்து ஓடறார்... னர்கிட்டே பக்கத்திலேயே கிறதுதான் பாதுகாப்புன்னு னைக்கிறார் போலிருக்கு...
ணக்கு... கேப்டன்!
ஒரு வழியா வந்து சேர்ந்திட்டோம் லோபோ... நம் திட்டப்படி இப்போ நாம மூணு பிரிவா பிரியணும்...
ஓ.கே. அதிவேக குதிரை வீரர்களோடு நான் மெயின் வீதி வழியா போய் அரண்மனையின் தென்புறம் வளைக்கிறேன்.



வடபுறத்தை நான் பார்த்துக்கறேன்... மிச்சப் பகுதியை பார்னே தலைமையிலே வர்ற சாரட் பிரிவு கவனிக்கட்டும்...
எல்லாம் திட்டப்படி நடந்தேறுமா...? இல்லே... சொன்னதை சரியா புரிஞ்சுக்காம இந்த ஆட்கள் குளறுபடி பண்ணி கலக கும்பல் மாதிரி சொதப்பிடுவாங்களா - தெரியலை!
பார்னே... ஓ.கே.யா?
இவ்ளோ புழுதியை நான் இதுவரை வாழ்நாள் மொத்தத்திலே முழுங்கினதேயில்லை பிரின்ஸ்!
எல்லாம் நல்லபடியா நடந்து முடிஞ்சா ரெண்டாவது நாள்லே நாம் கழுகுக்குத் திரும்பிடலாம்... திட்டத்திலே உன்னோட பங்கு பற்றி சந்தேகம் ஏதுமில்லையே?
சாரட் படைக்கு தலைமை தாங்கணும்... குதிரைப் படைக்கு ஒத்துழைப்புக் கொடுக்கணும்... அரண்மனை காவலாளிகள் மறுபடியும் ஒன்னு சேர விடாம பார்த்துக்கணும். சாரட் படையை அரண்மனை மைதானத்திலே கொண்டு போய் நிறுத்தணும்... சரிதானா?
சரிதான்... சொல்றதுக்கு சுலபமா இருக்கு... ஆனா நடைமுறையிலே எப்படி இரு ஜின் பொடியனை அங் காமிலேயே விட்டு வந்தது நல்லதாப் போச்சு
கப்பல்லே வாழ்க்கை ரொம்ப சொகுசா இருக்கும் - யாரும் புரட்சி பண்ணமாட்டாங்க... இந்த மாதிரி காரியமெல்லாம் பண்ண வேண்டியிருக்கும்னு நான் கனாக் கூட காணலை...



... முடியாதுன்னு சொல்ல நான் பழகிக்காததுதான் தப்பா போச்சு...
சலிச்சுக்காதே பார்னே... பொடியனா இருக்கிறதாலே இங்கே நான் ஒளிஞ்சிருக்கிறது யாருக்குமே தெரியாது...
நடக்கப்போற அமர்க்களத்தை இன்னொருவாட்டி வேறெங்கே பார்க்கப் போறேன்!
அதேசமயம்-
உன்னோட கடமையுணர்வு என்னை புல்லரிக்க வைக்குது லூயிஸ்! இந்த மாதிரி வனாந்தரத்திலே எங்கோ தெரிகிற புழுதிப்படலத்தை வச்ச கண் வாங்காமப் பார்த்துக்கிட்டு நிக்கிறியே உன் விசுவாசத்தை என்னன்னு சொல்றது...
MILICIA
ரெண்டு பேர்லே யாராச்சும் விழிப்போட இருக்கிறது இல்லியா? பொறுப்பை விட்டா ஒரு மந்தை மொத்தமும் இந்த வழியா கூட நீ கண்டுக்காம விட்டுடுவே!
இங்கே கால்நடைகள்கூட வரப்போறதில்லை... பின்னே ஜனங்களை பத்தி என்ன கவலை...
புரட்சிக்காரங்க பற்றி நீ கோவப்படலையா!
புரட்சிக்காரங்களா... ரெண்டு, மூணு போக்கிரிகள் மலைப்பகுதியிலே சுத்திக்கிட்டு இருக்கிறாங்க... அதைப் போய் பெரிசு படுத்திக் கிட்டு...
நீ சொல்றதும் சரியா இருக்கலாம்... ஆனா -
..?!!



வின்சென்ட்... அரண்மனைக்கு போன் பண்ணு - ஜீப்பைக் கிளப்பி ரெடியா வை - யாரோ இங்கே வர்றாங்க
ஹலோ... அரண்மனையா? லாஸ்ட் கணவாய்லே இருக்கிற கண்காணிப்பு மையத்திலேர்ந்து பேசறேன். புரட்சிக்காரங்க அங்கே வந்துக்கிட்டிருக்காங்க...
ஹலோ... ஹலோ...
நீ கனா காண்றேன்னு நினைக்கிறேன்... இல்லே ரொம்ப நேரம் சூரியன் இருந்த திசையிலேயே பார்த்துக்கிட்டிருந்ததாலே பார்வை கோளாறு ஏற்பட்டுப் போச்சா... புரட்சிப்படை அது இதுன்னு உளர்றியே.
ஹலோ... லாஸ்ட் கன்யான் போஸ்ட்டா? அரண் மனைக் காவலிலிருந்து பேசறோம்... ஹலோ... ஹலோ
கட்டாயிடுச்சு... பதிலே இல்லை
அந்த அராஜகப் பேர்வழிகள் போஸ்டுக்கு வந்து அங்கே இருக்கிற கருவிகளை நாசம் பண்ணியிருக்கலாம்...
காவலாளியின் குரலில் ப இருந்தது. கணவாய்ப் பகு கண்காணிக்க அங்கே இருப் ஒரு போஸ்ட்தான்... சுல ஊடுருவ முடியாது.



போய் மேலிடத்திலே சொல்வோம்... புரட்சியாளர்கள் எதுவும் செ ய்யக்கூடியவங்கதான்.
ண்புமிகு கவர்னரை நான் உடனடியா பார்க்கணும்
மேஜர்! என்ன விஷயம்? நான் ரொம்ப பிஸி.
புரட்சியாளர்கள் நடமாட்டம் இருக்கிறதா மலைப்பகுதியிலேர்ந்து அவசர தகவல் வந்திருக்கு...
டியும் பு சியாளர்களா? தேவையான பாதுகாப்பு நடவடிக் எடுங்கள்..!
மேலும்... மேற்கொண்டு என்ன செய்யணும்னு நாளைக்குச் சொல்றேன். இங்கே பார்ட்டி நடக்கப் போறது இன்னிக்கு... அதுதான் எனக்கு முக்கியம்... மற்றதெல்லாம் இரண்டாம் பட்சம்தான்.
இது ஒரு இராணுவ போஸ்ட்டா?
ஆமா... டெலிபோன் லைனை துண்டிச்சிட்டோம்... மற்ற கருவிகளையும் அடிச்சி நொறுக்கிட்டோம்.


புரட்சியாளர்கள் பற்றி கெடைச்ச செய்தியை நீங்க அலட்சியப்படுத்தக்கூடாது ஸார்... அந்த ஆட்கள் எதுக்கும் துணிஞ்சவங்க
இருக்கலாம் மிஸ்டர் ப்ரான்ஜென்
ஆனா இன்னிக்கு அப்படி சொல்றதுக்கில்லை... ஏன்னா வேறு சில விருந்தாளிங்க இங்க வந்திருக்காங்க... இதிலே அவங்களையும் மிஞ்சியவங்க யாரேனும் இருக்கலாம்.
தெரியும்... எனக்கு! ராஜதந்திரிகள், அயல்நாட்டு பிரதிநிதிகள் இப்படி ஒரு கலப்பு கும்டல்... ஆனாலும் நீங்க இந்த நாளை தேர்ந்தெடுத்தது சரியான தீர்மானம் இல்லை.
நோ... நோ... நீங்க திடீர்னு வந்த சேர்ந்ததனாலே நீங்க ஒரு விருந்தாளி... இங்கே நடக்கப் போற விருந்து ரொம்ப கிராண்டா இருக்கும்... கூத்தும், கும்மாளமும் அமர்க்களப்படும்... நாடு வளம் பெற இதெல்லாம் தேவைதானே.
இந்த நாட்டில் ஒழுங்கீனத்தை கட்டுப்படுத்த வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது
வாருங்கள்... உங்களுடைய அறையை காட்டுகிறேன்... புரட்சியாளர்கள் பற்றி நாளை விவாதிப்போம்.
அவர்களும் உங்கள் பிரஜைகள்தான்.
கேள்விப்பட்ட செய்தி நிசமாக இருந்தால் புரட்சிக் கும்பல் எந்த விநாடியிலும் இங்கே ஊடுருவலாம்.



உங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் அறை இதுதான்.
பிரின்ஸ் ஏதாவது திட்டம் வகுத்திருப்பானே... நான் விழிப்போட இருக்கணும்...
இரவு விருந்துக்கு நீங்கள் அணிய வேண்டிய உடுப்புகள் இதோ இருக்கின்றன மிஸ்டர் ப்ரான்ஜென்...
என் சூட்கேஸை எடுத்து வந்திருக்கிறேன்... எங்கே... போச்சு ?
ஆங்... இதோ... இருக்கிறது! தேவையானவற்றை கையோடு எடுத்து வந்திருக்கிறேன்... கொண்டாட்டம் தொடங்கட்டும்... பிரின்ஸ் இங்கே வந்தால் இதை வைத்தே அவனை நாட்டியமாட வைத்துவிடுவேன்.
எல்லா ஏற்பாடுகளும் ரெடியா..? விருந்தாளிகள் வரும் நேரமாச்சு..
ஏற்பாடுகள் எல்லாம் ரெடி!
போய் உடைமாற்றிக்கொண்டு சாதாரண ஆள் மாதிரி வா... இன்னிக்கு பார்ட்டி நம்மைப் பொறுத்தவரை வித்தியாசமான ஒன்றா இருக்கப்போகுது
?
ஜோக் அடிக்கிறியா!
வெறும் தமாஷா இருந்திட்டாத்தான் நல்லதாச்சே... லாஸ்ட் கன்யான் போஸ்ட்டை யாரோ கைப்பற்றிட்டாங்களாம்... அந்தக் கோஷ்டி நேரே இங்கே வரலாம்னு எதிர்பாக்கிறாங்க...


எமிலி யோவின் ஆட்களா...? அவங்களைச் சொல்லி குற்றமில்லை. அவங்க இடத்திலே நான் இருந்தா...
உஷ்ஷ்... உணர்ச்சி வசப்படாதே -அவங்க புரட்சி யாளர்கள்...
அவங்களை தடுத்து நிறுத்தறது நம்மோட கடமை.
கவனமா ரோந்து போகணும்... எல்லா விருந்தாளிகளும் வந்து சேர்ந்த பிறகு சாலைகள்லே காவலை பலப்படுத்தணும்.
இன்னிக்கு ராத்திரி ரொம்ப பரபரப்பா இருக்கப் போகுதுன்னு சொல்லு
அதே சமயம்-
அதோ... ஸிடி ஆப் ஸீ!
விருந்தாளிகள் வரத் தொடங்கியாச்சு...
என்ன எழவு உடுப்போ... கஷ்டம்டா சாமி


ஜனங்க ஓட்டு மொத்தமா குழுமி இருக்கிற நேரத்திலே இங்கே வந்து கலாட்டா பண்ற தப்பை பிரின்ஸ் செய்ய மாட்டான்னு நெனைக்கிறேன்.
இது ஒரு கூடுதல் எச்சரிக்கை நடவடிக்கை... எதுக்கும் கூட்டத்தை விட்டு சற்று விலகி இருக்கிறதுதான் நல்லது.
எப்படியும் விருந்துக்கு நான் போகத்தான் வேணும்.. கவர்னரோட நன்மதிப்பை சம்பாதிக்க அது அவசியம்.
வாத்திய இசைக் குழு வேலையை ஆரம்பிச்சாச்சு... இனி விருந்தாளிகளை பற்றி நாம் அலட்டிக்கத் தேவையில்லை. ராத்திரி முழுக்க இங்கே ஏக அமர்க்களமா இருக்கும்.
வெட்டி பந்தா...


ஏன் புலம்புகிறாய் ? -நீயும்தான் ஜாலியா இருக்கப் போறே...!
மாறுதலுக்கு நிலா வெளிச்சத்திலே காவல் நிற்கப் போறதை சொல்றியா?
அவன் சொன்னதுதான் சரியோ..? வீணா ஒண்ணுமில்லாததை பெரிசு படுத்தி ரகளை பண்றாங்களோ?
உண்மை எதுவா இருந்தாலும் நான் கடமையை செய்ய வேண்டியதுதான்... ஆனாலும் இந்த அமைதி ரொம்ப வித்தியாசமாத்தான் இருக்கு...
ஒண்ணும் பிரச்சனை இல்லியே!
இல்லை... மேஜர்
காப்பியா... எனக்குக் கொஞ்சம் தரலாமா?
உங்களுக்கு இல்லாததா? இந்தாங்க மேஜர்...
புரட்சிக் கும்பல்..
இவங்களுக்கு எப்படி துப்பாக்கி கெடைச்சது?


சுட்டுத் தள்ளுங்கள்...
ஆஆஆ!
அந்த திடீர் தாக்குதலால் காவலாளிகள் நிலை குலைந்து ஓடத் தொடங்கினர்...



குட் பை ஆபீஸர்... உன்னோட சேவை எங்களுக்குத் தேவையில்லை... ஹா...ஹா
பிரின்ஸ் சொன்னதை மறந்திடாதே... துப்பாக்கிகளை 'சேகரிக்கணும்
"துப்பாக்கிகளை சேகரிக்கணும்னு..." பேசிக்கிட்டானுகளே
TELEFONO
குட்... எல்லோபோவின் குதிரை வீரர்கள் இந்நேரம் பிரதான சாலை வழியாக ஆயுதக் கிடங்கை நெருங்கிக்கிட்டிருப் பாங்க....
காவலாளிகளின் கவனம் முழுவதும் அவங்க பக்கம் திரும்பியிருக்கும்... அரண்மனை முகப்பில் நமக்கு அதிகமாக எதிர்ப்பு இருக்காது.
ம்ம்... முன்னேறுங்கள்


தெற்கிலும் நெருக்க... வேண்டும்
மூன்று படைப் பிரிவுகளுக்கு தண்ணி காட்டியாச்சு... பிரின்ஸின் திட்டம் நல்லாவே பலிச்சுக்கிட்டு வருது...
ஆயுதக் கிடங்கு லோபோவின் கண்ணெதிரே...!
ஆயுதக்கிடங்கை தாக்குவதன் நோக்கம் காவலாளிகளின் கவனத்தை திசை திருப்பத்தான் அங்கே அரண்மனையின் முகப்பில் நம் தோழர்களுக்கு எதிர்ப்பு இல்லாமல் செய்வதுதான்... ஆனால் இங்கே கேட்பாரற்றுக் கெடக்கு...
கடைசி நிமிடத்தில் நாம் திசை மாறிப் போய்விட வேண்டும் என்பதுதான் திட்டம்...
அலட்டிக்காதே... இது வலியக் கெடைச்சிருக்கிற போனஸ்.ஏன் வாணாம்னு விட்டுப் போகணும்?
ஆனால்-
!?!
டாங்குகள்...!நீசர்கள் காத்துக்கிடந்திருக் கிறார்கள்.
திரும்புங்க... சீக்கிரம்! டாங்க்கை எதிர்க்கிறது முட்டாள்தனம்!


பூம்! பூம்!
டூம்!
லோபோ... லோபோ... பிரின்ஸ் வகுத்த திட்டப்படி நாம் போயிருக்கணும்... ஆயுதக் கிடங்கு மேலே ஆசை வச்சது தப்பா போயிடுச்சு... லோபோ?
நம்மை நசுக்க வர்றாங்க...
டாங்குக்குள்ளற நீ பத்திரமா இருக்கலாம்... ஆனா நான் ஓடிப்போறதா இல்லை ஏதாவது உபாயம் பண்ணி-
!?
பூம்!
திரும்பிப் போங்க... இன்னிக்கு ராத்திரி ஏகப்பட்ட வாணவேடிக்கை இருக்கு!


கண்ட்ரோல் பகுதிக்கு போடா! - லீவரை இழு!
பதறாதே பார்னே... இதோ -
ஒண்ணு...
...ரெண்டு... டமால்!
?
குதிரைகளற்ற வண்டி டாங்குகள் மீது மோதியது!
பார்னே செட் அப் பண்ணின பீரங்கி எப்படி டக்கரா போகுது பார்த்தியா...
தனி ஆளா இரண்டு டாங்க்கை துவம்ஸம் பண்ணிட்டானே — ஹீரோதான்... அவன் இல்லேன்னா நாம எல்லோரும் சட்னியாகிப் போயிருப்போம்!


உள்ளே - விருந்து அரங்கில் -
ஒரே வெடிச் சப்தம் கேட்டதே... பாதுகாப்பு ஏற்பாடு பற்றி நம்பிக்கையா இருக்கலாமா கேப்டன்?
அதிலே உங்களுக்கு சந்தேகமே வேண்டாம்... நடனம் ஆடறதுக்கு அழகான ஜோடியா தேடிப்பிடிங்க... நகரத்தைப் பாதுகாக்க இராணுவம் ரெடியா இருக்கு...
கொஞ்சம் நிதானிப்போம்...
ஆயுதக்கிடங்கை குறையாட ஆசைப்பட்டது காரியத்தை கெடுத்திடும் போல ஆயிட்டு ... முட்டாள் நான்...
இதுவும் நன்மைக்குத்தான்... பீரங்கியாலே சுட்டது அவங்களுக்கு நாம காரியமாத்தான் வந்திருக்கோம்னு புரிய வச்சிருக்கும்...
ஹலோ... அரண்மனை தொடர்பு கொடு -அவசரம்!


மேஜர் வெலாஸ்கோ பேசறேன்...! யார் சுயாரெஸா - சொல்!
இங்கே தாக்க இருக்காங்க... டாங்க்கை வச்சு முதல் தாக்குதலை சமாளிக்க முயற்சி பண்ணினேன். ஆனா, அவைகளை பீரங்கியாலே அழிச்சுட்டாங்க... கூடுதல் படைபலம் வேணும் மேஜர் !
ஓகோ... அவங்க மறுபடியும் ஒண்ணா சேர்ந்து அணி வகுக்கிறதுக்கு முன்னாடி உதவியா படைபலம் அனுப்பி வைக்கிறேன்.
சார்ஜண்ட்... இரண்டாவது, நாலாவது படைப்பிரிவை உடனே ஆயுதக் கிடங்குக்கு போக உத்தரவிடு... எதிரிகள் அங்கே தாக்க இருக்காங்க... இதோ நானும் போறேன்
வெரிகுட்... எல்லா படைப்பிரிவும் நகரின் மறுபக்கம் நகருகின்றன... பிரின்ஸின் திட்டம் படு சூப்பரா போயிட்டிருக்கு...


பாலஸை காத்து நின்ன வீரர்கள்லாம் போயாச்சு... நாம முன்னேறுவோமா மிஸ்டர் பிரின்ஸ்?
பொறு... பெபே...
ஆயுதக் கிடங்கை நோக்கி குவிந்து வரும் படைவீரர்களிடமிருந்து விலகிச் செல்ல பார்னேயின் பிரிவுக்கு 12 நிமிட அவகாசம் வேணும்...
நாட்டிய ஹாலை நோக்கி நாம முன்னேறும் போது எதிரிகளுக்கு அதிர்ச்சியா இருக்கும்...
எப்படி திடீர்னு நாம அங்கே முளைச்சோம்னு பிரமிப்பிலே கையும் ஓடாது காலும் ஓடாது அவங்களுக்கு...
அங்கே ப்ரான்ஜென் தவிர மத்தவங்கள்லாம் அப்பாவிங்கங்கிறதை நாம மறந்திடக்கூடாது.
இந்த புதுபாடல்கள்லாம் குப்பரா இருக்கில்லே... நண்பரே?
எதையும் ரசிக்கிற மூடிலே நான் இப்போ இல்லை.. ஸாரி...
ஓ... அந்த புரட்சியாளர்களை பத்தியே நெனைச்சுக்கிட்டிருக் கீங்களா..?
என்னைப்பத்தி நான் அக்கறை படலை... உங்க பாதுகாப்பு பற்றித்தான் கிலேசப்பட்டுக் கிட்டிருக்கேன்.
இவ்வளவு பெரிய இராணுவம் எப்போதுமே என்னைச் சுற்றி இருந்ததில்லை... சரியான கேலிக் கூத்து... இந்த மானிட அரணுக்கு எந்தப் பக்கம் நிற்கிறது சுதந்திரமானது?
... எந்தப் பக்கம் சிறைக்கூடம்னு அடிக்கடி குழப்பம் வந்திடுது...
!


அரண்மனை வாயிலில் -
கல்யாணத்துக்கு அப்புறம் பாரேன்... நானும் பெரிய மனுஷனா ஆயிடுவேன்... மாளிகைக்குள்ளே ஆடுற தகுதி நமக்கும் கெடைக்கும்... ஜானிடா!
அந்த மாதிரி பேராசை எல்லாம் எனக்கு இல்லை -
இங்கே என்ன கொறைச்சல்..? இசை முழக்கம் ஜோராகக் கேட்குது... நிலா வெளிச்சம் மாதிரி இதமான சூழல்... ஷிடி ஆப்ஸீ மாதிரி சாந்தி நிலவுகிற இடம் உலகத்தில் வேற எங்கேயாச்சும் உண்டா என்ன?
டுமீல்! டுமீல்! டுமீல்!
டுமீல்! டுமீல்! டுமீல்!
ஜானிடா... வா ஓடிப் போயிடலாம்... இங்கே நின்றால் ஆபத்து...
கிராமப் பகுதிக்கே திரும்பி போயிட ஆசைப்படறேன். நகரம் நமக்கு ஒத்துவராது
இவர்களை எப்படி தடுத்து நிறுத்தப் போகிறோம்?!
உங்களாலே முடியாது... போங்க - அப்பால்!


சரியான ஆட்டம்...
தலைவாசலுக்கு வலப்புறம்... தோழர்களே !
புரட்சிக்காரங்க..! தோட்டம் முழுக்க அவங்கதான்...
அதெப்படி...? அங்கே ஆயுதக் கிடங்கிலே இருக்கிறதாலே சொன்னாங்க...
வந்திட்டாங்க... திருப்பி தாக்கணும்!
பாதுகாப்பு ஏற்பாட்டை பலப்படுத்தணும்...
நான் பயந்த மாதிரியே ஆயிட்டுது...
எல்லோரும் மேஜைக்கு அடியிலே ... இங்கே துப்பாக்கி ... கப்போகுது.
அந்த ஜன்னல் தட்டிகள் அல்பமானவை... குதிரைகள் சுலபமா கிழிச்சுக்கிட்டு உள்ளே பாய்ஞ்சிடும்.
கதவை எல்லாம் மூடிட்டாங்க...


ஸ்ஸ்ஸ்ஸிங்!
ஜம்..
நான் முன்னாலே போறேன்...
அந்த வேலையை எல்லாம் மத்தவங்கிட்டே வுட்டுடு லோபோ... நீ களைச்சுப் போயிருப்பாய்.
ஓய்ஞ்சு போய் கிடக்க இதுவா நேரம்...
ம்மப்ப்ப்...
விர்ர்ர்!
களைச்சுப் போயிருக்கேனு சொன்னியே... இப்போ சொல்லு..
துவாரத்தை பெரிசாக்கணும்...


வந்திட்டாங்க.., மேஜைகளை சாய்த்து அரண் ஏற்படுத்துங்க... சீக்கிரம் ...
எல்லாத்தையும் நொறுக்கித் தள்ளுங்க!
தடுத்து நிறுத்துங்க -சுடவும் தயங்க வேண்டாம்
அதிக சிப்பாய்களை வீழ்த்தறவங்களுக்கு பரிசு கொடுக்க தீர்மானிச்சிருக் கேன்... பாயுங்க!
வாங்க கவர்னர்-உங்க ஆபீஸ்க்குள்ளாற போயிடலாம். ஆயுதக் கிடங்கிலே இருக்கிற உங்க வீரர்கள் இங்கே வந்து சேருகிற மட்டிலும் நாம தாக்குப்பிடிச்சாகனும்
புரட்சிக்காரங்க வகுத்திருக்கிற திட்டத்தை என்னாலே பாராட்டாம இருக்க முடியலை...
இங்கே ஆபத்து ஏதும் வராது - உங்களுக்கு!
நம்ம ரெண்டு பேரிலே வர்ற ஆபத்து யாருக்குன்னு தெளிவா சொல்லத் தெரியலை எனக்கு!


இந்த ஜன்னல் ஏன் திறந்து கிடக்கு... எப்படி ஒரு ஆபத்தான சூழ்நிலைன்னு புரியலையா உனக்கு... மூடி வை...
சரி... ஸார்
இந்த மேஜை, நாற்காலிகளையே நாம் அரணாகவும், ஆயுதமாகவும் பயன் படுத்திக் கொள்ளலாம்!
ஆயுதக் கிடங்குக்கு போன் பண்ணுங்க... இவனுகளை பூண்டோட அழிச்சுடலாம்
வீணா அலட்டிக்கிறீங்க...
அப்படி ஒன்னும் பெரிசா ஆபத்து வந்திடப் போறதில்லை... மிஸ்டர் ப்ரான்ஜென்.
பிரின்ஸ்!!!
அந்த நாற்காலி அப்படியே உன் கையிலே இருக்கட்டும்...
எறிஞ்சியோ... எமலோகம் போயிடுவே!
எமிலியோவின் சார்பில் வணக்கத்தை தெரிவிச்சுக்கிறேன் மிஸ்டர் கவர்னர்... உங்களோட கொஞ்சம் பேசணும் -


பிரின்ஸ்... முன்னமே உன்னை நான் கொல்லாமல் விட்டது தப்புன்னு இப்போ புரியுது...
பழசை எல்லாம் இப்போ நினைச்சுப் பார்த்து என்ன பிரயோஜனம் ப்ரான்ஜென்?
ஓ... நீங்க ஒருத்தரை ஒருத்தர் ஏற்கெனவே தெரிஞ்சவங்கதானா!
அன்னிக்கு தப்பிச்சுக்கிட்ட ப்ரான்ஜென் எதிர்பாராத விதமா மறுபடியும் என்னோட பாதையிலே குறுக்கிட்டிருக்கிறதை நெனைச்சுப் பார்த்தா — விதியோட விளையாட்டை புரிஞ்சுக்கவே முடியலை...
சும்மா பழி போடாதே பிரன்ஸ்... இன்னிக்கு நான் நிர்மாணிச்சிருக்கிற ராஜாங்கம் சட்ட பூர்வமானது... அத்தனை ஒப்பந்தங்களுக்கும் நகல் கவர்னர் கிட்டே இருக்கு!
ஆங்... அந்த பத்திரங்கள்லாம் இதோ இங்கேயே இருக்கு!
ஏய்... என்ன இது -
கும்ப்!
கும்!


இந்த தடவை நீ தோத்துட்டே பிரின்ஸ்... எங்கிட்டேர்ந்து தப்பவே முடியாது...
இதுக்கு மேலே என்னாலே பொறுத்துக்க முடியாது மிஸ்டர் ப்ரான்ஜென்... உங்க அடாவடித்தனம் எல்லை மீறி போயிட்டுது... இதுக்கு மேலே நீங்க ஏதாச்சும் பண்ணினா நான் சும்மா இருக்கமாட்டேன்..
?!
தாங்க் யூ ஸார்... நீங்க மட்டும் இல்லேன்னா...
பரவாயில்லை... விஷயத்தை தெளிவுபடுத்த நெனைச்சேன். மிஸ்டர் ப்ரான்ஜென் என்ன சொல்றார்னு கேட்போம்.
சட்டப் பூர்வமா பண்ணியிருக்கிறேன் எல்லாவற்றையும்! அவங்கதான் சட்ட விரோதமா புரட்சி பண்றாங்க...
பத்திரங்கள்லாம் சரியா இருக்கு... நிலங்களை வாங்கிய பேரத்தில் எந்த ஒழுங்கீனமும் இருக்கிறதா தெரியலியே...
அப்படியில்லை...
?
விற்கப்பட்ட நிலங்களின் வரைபடத்தை இந்த பிரதேச வரைபடத்தின் மீது வைத்துப் பாருங்கள்... இவரோட சூழ்ச்சி புரியும்... ஒப்பந்தங்கள் முறைப்படிதான் நடந்திருக்கின்றன...
ஆனால் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலப்பரப்புக்கும் நிலத்தின் உண்மையான பரப்பளவுக்கும் நிறைய வேறுபாடு உண்டு.
...உண்மையான பரப்பளவையும் அவர் கொடுத்த விலையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்... சதுர மீட்டருக்கு அவர் தந்திருப்பது பிச்சைக்காசு என்பது புரியும்.



...இப்படி அடிமாட்டு விலைக்கு நிலத்தை அவர்கள் விற்க எவ்வகையில் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டனர் என்கிற தகவல் மிஸ்டர் ப்ரான்ஜெனின் வாயிலிருந்தே வரட்டும்...
ஓ அதனால் தான் அத்தனை அடியாட்களை தீனிபோட்டு அருகே வைத்துக் கொண்டிருக்கிறீர்களா... இப்போது எல்லாம் புரியுது
இப்போ பேசி முடிக்க மாட்டாங்க போலிருக்கு... வாங்க ஹாலுக்குப் போய் டான்ஸை திரும்பவும் ஆரம்பிக்கச் சொல்லுவோம்!
தோற்றம் முரட்டுத்தனமா இருக்கு... ஆனா இந்த புரட்சியாளர் எந்த வன் முறையிலும் ஈடுபடாமல் சாதுவாட்டம் நிற்கிறார்
நாங்க இதுவரை உங்களை பார்த்ததில்லை... நிறைய கேள்விப்பட்டிருக்கோம்... பேசியிருக்கோம்... நாங்க நெனைச்சுக்கிட்டிருந்த மாதிரி நீங்க ஒரு சர்வாதிகாரி இல்லைன்னு இப்போ புரிஞ்சுக்கிட்டோம்.
உங்களை சந்திச்சதில் ரொம்ப சந்தோஷம்... கரோனடா பகுதி வாழ் மக்களை நிறைய சந்திக்க ஆசைப்படறேன்... அப்போதுதான் அவங்களை நான் புரிஞ்சுக்க முடியும்.
வாங்க... எங்க புரட்சி முகாமுக்கு வந்து ஒருநாள் தங்குங்க... உங்களுக்காக எங்க கதவு திறந்தே இருக்கும்


புரட்சியாளர் முகாமுக்கா? இல்லை... உங்க வீடுகளுக்கு வர்றேன்... இந்த அற்ப ஜந்து உங்க வீடுகளை உடனே திருப்பித்தர ஏற்பாடு பண்றேன்...
அப்போ... என் கதி!
நிலத்துக்காக நீ கொடுத்த தொகை அப்படியே உனக்கு திருப்பித்தரப்படும்... கால்நடைகளையும் விலை கொடுத்து அரசு எடுத்துக்கும்... உனக்கு லாபமோ, நஷ்டமோ இருக்காது...
புல்வெளி அழிஞ்சு போச்சு... கால்நடைகளை பார்த்துக்க ஆள் வேணும்... எத்தனை ஆட்களை நீங்க ஏற்பாடு செய்ய முடியும் மிஸ்டர் பிரின்ஸ்?
ப்ரான்ஜெனால் சிறையில் வைக்கப்பட்டிருக்கிற எமிலியோவை கேட்டீங்கன்னா அவர் சொல்வார் உங்க கேள்விக்கான பதிலை.
அதை நான் மறந்திட்டேன்... அவரை உடனே விடுவிக்க உத்தரவிடுகிறேன் எனக்குத் தெரியாம நடந்த தப்புகளுக்காக ரொம்பவும் வருத்தப்படறேன்.
ஹோ...
பாதிக்கப்பட்டு விழுந்து கிடக்கும் சிப்பாய்கள் சீக்கிரமே எழுந்துடுவாங்க... கவலைப்பட தேவையில்லை....
!
மூன்று தினங்களுக்குப்பின் -ப்ரான்ஜெனின் வீட்டில்...
எல்லாம் சரியாயிடுச்சின்னு நினைக்கிறேன்...


யாருக்காகப் போராடினீங்களோ... அவங்க உங்களுக்குத் தரும் பரிசு இது... ஏற்றுக் கொள்ளுங்க மிஸ்டர் எமிலியோ...
மிஸ்டர் பிரின்ஸ்... உங்க மீது நான் வச்ச நம்பிக்கை வீண்போகலை...
மிக்க நன்றி!
இந்த மாதிரி உபச்சார வார்த்தைகளை சொல்லி என்னை முகம் சிவக்க வைக்காதீங்க!
வார்த்தைகளை விட அழுத்தமாக நம் உணர்வுகளை தெரிவிக்கும் வழிமுறை இதுதான் -இல்லையா?
நிச்சயமாக!
கேப்டன்... எஞ்சின் சரியாயிட்டுது... நாம கௌம்பலாம்!
இந்தப் பக்கம் போகும் போதெல்லாம் இங்கே அவசியம் நீங்க வரணும் மிஸ்டர் பிரின்ஸ்...
மிஸ்டர் ப்ரான்ஜென் நேற்றே இங்கேர்ந்து கிளம்பிப் போயிட்டதாலே இனி இங்கே வர்றவங்களுக்கு சுமுகமான, இணக்கமான வரவேற்பு இருக்கும்கிறதிலே சந்தேகமே வேண்டாம்.
பார்னே எங்கே போனான்..? கண்ணிலேயே படக்காணோமே!
இந்த நினைவுப் பரிசுகளை சேகரிக்கப் போயிருந்தேன்...: நேரமே போதலை...
சரி... கிளம்புவோமா... வந்த வேலை முடிஞ்சுட்டுது...
ம்ம்... கிளம்ப இஷ்டமேயில்லை -அதுக்காக இங்கேயே உட்கார்ந்துக்கிட்டு இருந்திட முடியுமா என்ன?
அந்த ஏழை எளிய மக்களின் அன்பை என்னின்னிக்கும் மறக்கவே முடியாது!

முற்று


விச்சு & கிச்சு!
விச்சு இன்னைக்கு ராத்திரி சாப்பாட்டிற்கு மீன் வருவல் வாங்க வேண்டிய அவசியம் இல்லை! 'சட்னி - சன்டார்' வீட்டிற்கு விருந்துக்குப் போகப் போறோம்!
யார் அந்த வேட்டை வீரனா? எப்படி கிச்சு?
ஐயாவோட சாமர்த்தியம் தான்! நாமும் அவரைப் போல் பெரிய வேட்டையர்கள் என்று
அளந்து விட்டேன், உடனே இரவு சாப்பாட்டின் போது, நமது அனுபவத்தைப் பற்றி அரட்டை அடிப்போம் என்றார்!
அடப்பாவி கிச்சு! துப்பாக்கியை நாம் கையால் எடுத்தது கூடக் கிடையாது, அதுவும் அந்தாளு பொய்சொல்றவர்கள் என்றாலே ஒழித்துக் கட்டிவிடுவான்!
கவலைப்படாதே விச்சு, நான் பேசிக்கொள்கிறேன்! இன்னைக்கு விருந்தில் ஒரு பிடி பிடித்து விட வேண்டியது தான்!
பார்த்தீர்களா தம்பிகளா, என் வேட்டையில் சிக்கிய மிருகங்களை? இனி உங்கள் கதையைச் சொல்லுங்கள், சாப்பாட்டிற்கு முன் கொஞ்சம் கேட்போம்!
நீயே சொல் கிச்சு!
ம்... முதலில் அடர்ந்த ஆப்ரிக்கா காட்டில் எங்கள் அனுபவத்தைச் சொல்கிறேன் சார்!
ஆஹ்! எனக்கு நல்லாவே தெரியும்!


நாங்கள் காட்டிற்குள் நடந்து செல்லும் போது ஓர் மனிதனைத் திங்கும் புலி எங்கள் மீது பாய்ந்தது!
ஏய் தம்பி ஏமாற்றாதே என்னை! அடர்ந்த ஆப்ரிக்காக் காட்டில் மனிதனைத் தின்னும் புலி வகையே கிடையாது!
ஐயோ! கிச்சு மாட்டிக் கிட்டானே! நாம் ஏதாவது அளந்து விட வேண்டியது தான்!
சார் என்னோட ஃப்ரண்ட் சொல்றதை கண்டுகொள்ளாதீங்க! நாங்கள் 'டெட் ஸீயிற்கு'ச் சென்று விட்டு திரும்பும் போது அவனுக்கு பித்தம் தலைக்கு ஏறிடுச்சு!
டெட் ஸீயா? அங்கே என்ன செய்தீர்கள்?
அதைச் சுட்டுக் கொன்றோய், வேறென்ன!
ஆஹ்! சே!
கவலைப்படாதே கிச்சு! நாம மீன் வருவல் விற்கும் கடையைத் தாண்டித் தான் வீட்டிற்குப் போகணும்!
முற்றும்.

# "மாதம் ஒரு முகவர்"



| | | |
|---|---|---|
| பெயர் | : S. R. முத்துசாமி | வயது : 50 |
| முகவரி | : M/s. Vedha News Agency,<br>130/A, Aurobindu Street,<br>PONDICHERRY - 605 001. | |
| சொந்தமாக புத்தகக்கடை உள்ளதா அல்லது கடைகளில் விநியோகம் செய்வது மட்டும்தானா? | : சொந்த கடையும் உண்டு. வினியோகமும் உண்டு. | |
| லயன் / முத்து காமிக்ஸ் விற்பனையாளராக இருப்பது எவ்வளவு காலமாய்? | : ஆரம்ப கால முதல். | |
| இதர ஏஜென்சிகள் எந்தெந்த பத்திரிகைகளுக்கு? | : All Indian Language Mag & Eng. Mag, En g. News Papers. | |
| லயன் / முத்து காமிக்ஸ் இதழ்களின் நிறைகள் என்று நீங்கள் நினைப்பது என்ன? | : வாசகர்களை கவர செயது வரும் முயற்சிகள் நிறைவு தருகிறது மேலும் கவர வேண்டும். | |
| குறைகள்? | : குறிப்பிட்ட தேதி **புக்ஸ்** கிடைக்காமல் அலைகழிப்பது வாங்கும் உற்சாகத்தை குறைத்து வருகின்றது. | |
| விற்பனை உயர்விற்கு என்ன பண்ணலாம்? | : குறிப்பிட்ட தேதியில் பிரதிகள் கொடுப்பது, வாசகர்களுக்கு சீசனுக்கு தகுந்தவாறு இதழுடன் Free கொடுப்பது. | |

அட்டைப்படம் மிக மிக சூப்பர். கதை அட்டைபடத்தைவிட நன்றாக இருந்தது. பக்கத்திற்கு பக்கம் விறுவிறுப்பு. ஆக்ஷன்.
S. ஹரிஹரன், வாணியம்பாடி.

இரத்தப்படலம் இனிவரும் பாகங்களில் ஏதாவது ஒன்றை கலரில் வெளியிட்டே ஆகவேண்டும். லயன் கிளாஸிக்-ஐ ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.
G. முத்து கிருஷ்ணன், பழவந்தாங்கல்.

உங்கள் அபிமான, தீவிர வாசகன் நான், ஏழெட்டு வருடங்களுக்கு முன்னால் லயன் தீபாவளி மலரில் ஒரு சின்ன லெட்டர் ஒன்றை பிரசுரித்தீர்கள்! ஒரு பொறி போல் கிளம்பி ஏறக்குறைய எல்லா பிரபல பத்திரி கைகளிலும் எனது விமரிசனக் கடிதங்கள் 250க்கும் மேல் பிரசுரமாகி நிறைய பாராட்டுக்கள் வாங்கித் தந்தது. இன்று ஒரு படி மேலே போய் 1997ம் வருட தினகரன் தொழில் மலரில் (10/10/97) எனது சிறுகதை முதல் பரிசாக 2000/- வென்றுள்ளது. (முதன் முதலில் எழுதிய சிறுகதை).
பாரதி நந்தீஸ்வரன், குமாரபாளையம்.

இரத்தப்படலம் பாகம் 7- சித்திரக்கதையல்ல-ஒரு ஆங்கிலத் திரைப்படம்! அந்த அளவுக்கு சித்திரங்கள் அபாரம்-தயவுசெய்து தாங்கள் இரத்தப்படலத்தின் ஆரம்பக் கதைகளிலிருந்து கடைசி வரை ஒரே புத்தகமாக வெளியிட முயற்சிக்க வேண்டும். அது எத்தனை விலையாயிருந்தாலும் சரி - நாங்கள் தயார்.
சி. பாபு, கோவை.

நினைவாற்றல் இழந்த நமது ஹீரோ;ஒருகையிழந்த அமோஸ்;தாய்மை அடைய முடியாத ஜோன்ஸ்;பார்வையிழந்த ஜெகேஹட்டாவே;இத்தனை மைனஸ்கள் இருப்பினும் சூப்பராக வெற்றி அடைந்ததற்கு காரணம்-கதையமைப்பு, எனினும் (தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும்) இந்த வெற்றி ஆசிரியர் விஜயன் அவர்களையே சாரும்.
A. Siva, M.A., Annadanapatti.

"ஒருபனி இரவுப்படலம்" கண்டேன். கதை வித்தியாசமாக இருந்தது. இரத்தப்படலம் 8-ஐ விரைவில் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.
S. Murugan, சாமிநாயக்கன்பட்டி.

புயலாய் தொடங்கிய XIII -வின் 7-வது பாகம் விறுவிறுப்பாய் சென்று பல சேதாரங்கள் விளைவித்து ஓய்ந்து போனது. முடிவில் சோகம் XIII-னை மட்டுமல்ல என்னையும் பாரமாய் அழுத்தியது. ஓவியர் வான்ஸின் கைவண்ணம் பிரமிக்க வைக்கிறது.
A. ராமமூர்த்தி, மேட்டூர் அணை.

"ஒரு பனி இரவுப் படலம்" ஏற்கனவே "திகில் லைப்ரரி II ல் "புயல் ராத்திரி" என்ற தலைப்பில் வந்தது என்றாலும் த்ரிலிங்காக இருந்தது.
பா. தனபால், பழையூர் சத்திரம்.

அழகுத்தமிழில் தெளிவான நீரோட்டமாக, ஆர்ப்பரிக்கும் இதயத்தோடு இருக்கும் XIII ஐ எங்களுக்கு தெரிவித்த உங்கள் லயன் காமிக்ஸ் குழுவில் இருக்கும் அனைவருக்கும் எங்களது கோடி நன்றி. தயவு செய்து 8, 9, 10 பாகங்களை உடனடியாக வெளியிடவும்.
N.P. MURALI KANAN, பெரமனூர்.

இத்தனை பெரிய சைஸில், விளம்பரங்கள் ஏதும் இல்லாமல் முழுமையாக வெளியிடுவதுதான் நமது வெளியீடுகளின் சிறப்பம்சம்! ஆயிற்று-அப்படியே 8,9,10 ஆம் பாகங்களை முழு வண்ணத்தில் வெளியிட்டால் அவ்வளவுதான்! நம்மை மிஞ்ச எதுவுமில்லை!
இரா. இன்பரசன், Chinnathirupathy.








# "மெகா ஸ்பெஷல்" க்கு

முன்பதிவு செய்திடும் முதல் 500 வாசகர்களுக்கு - ஒரு சூப்பர் 10" × 15" ப்ளோ-அப் பரிசு! பிரதிக்கு முந்துங்கள்!

பதிவுத் தபாலில் பெற்றிட : ரூ. 28/-
சாதா தபாலில் பெற்றிட : ரூ. 24/-

**மெகா ஸ்பெஷல் முன்பதிவுக் கூப்பன்**

பெயர் : ______________ வயது : ______

முகவரி : ______________________________

______________________________

______________ பின்கோடு : ______

தேவையான பிரதிகள் : ______________________________

பணம் அனுப்பிய விபரம் : ______________________________

தேதி ______________

அனுப்ப வேண்டிய முகவரி:
**பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,**
த.பெ. எண் : 374, சிவகாசி - 626 123.

புத்தாண்டில் வருகின்றன!



## லயன் வாசகர் ஸ்பாட்-லைட்!


வாசக ஓவியர்-
ச.காணிக்கைராஜ்
139-8, சீனிவாசபுரம்
கடாரங்கொண்டான் (PO)
610003.





சார் டீ ஆர்டருக்கு என்ன?
நீயும் வந்துட்டியா! உன் கிழவருக்கு மயக்கம்! காதல் மயக்கம்!
அந்த இந்திய மாஜிக் நிபுணரின் மகளைக் கட்டி வைக்கறதாமாம் கல்யாண ஆசை வந்துட்டது...!
நியாயமான ஆசை-தானே!
மறுநாள் ஒரு விசித்திரமான ஊர்வலம்...
நற.. நற..
டேய்! கிட், நான் விசாரிச்சேன், ஏற்கனவே பலரை திருப்பியனுப்பிட்டானாம் அந்த ஆள்...!
வா! வா!! உங்கள் வரவு நல் வரவாகுக! உள்ளே எஜமானர் காத்திருக்கிறார்...!
ஐயோ! பேய்! இல்லையில்லை நாய்! பேசும் நாய்!
ஆ.. ஆமாம்! ஆனா இது அசையுதே!
உஸ்ஸ்ஸ்
நான் ரொம்ப நேரமாக காத்துக்கிட் டிருக்கேன்!


வந்த விருந்தினரை முதலில் வயிறு முட்ட சாப்பிட வைப்பதே எமது வழக்கம்! உணவருந்த வாருங்கள் ஜீபூம்பா...!
அடா! என்ன அருமையான நூடுல்ஸ் இது! தின்னத் தின்ன திகட்டவில்லை! ஆனா அளவு குறையவும் இல்லை!
இதோ பாருங்க ஜீபூம்பா!
இங்கே! நான் பேசாம இந்த கோழி முட்டை அப்பத்தை ஒரு கை பார்க்கிறேன்!
உவ்வே...!
ஜீபூம்பா! மிக்க மகிழ்ச்சி! உங்கள் இருவரையும் பார்த்ததுமே நான் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டேன் ஜெய் ஜீபூம்பா...!
அமைதி! அமைதி!! ஜெய் ஜீபூம்பா! ஜெய் ஜீபூம்பா!! ஹா...ஹா...!
உவ்வெய்...!
ஒரு அழகாக பெண் வரவழைக்கப்பட....
அட! சூப்பர் பிகர்ஸ்!
வணக்கம்!
அடச்சே! என்னடா பெண் பார்த்தாய்
ஆ.. ஆமாம் பாஸ். தூரத்திலிருந்து தினம் பார்த்ததில் கொஞ்சம் ஏமாந்திட்டேனு போலிருக்கு..!
ஆமாமாம் சுத்த மோசம்!